# பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை. ஏசாயா 54 : 4

இரவும் பகலும் உபவாசித்து ஜெபிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, தாயே, தகப்பனே,

**"நீ வெட்கப்படுவதில்லை"**

நடக்கும் சம்பவங்களையும், சூழ்நிலைகளையும் பார்த்தால் தோல்வி ஆகிவிடுமோ? என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா?

**"பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை"**

**பக்தன் பாடுகிறார் . .**

கர்த்தருக்குக் காத்திருப்போர்
யாரும் வெட்கப்பட்டுப் போவதில்லை,
துன்பங்கள், தொல்லைகள், கஷ்டங்கள் வந்தாலும்,
கர்த்தருக்குக் காத்திருப்போர்
யாரும் வெட்கப்பட்டுப் போவதில்லை.

ஆம், நண்பரே, அடிக்கடி இந்தப் பாடலைப் பாடுங்கள். நம்பிக்கையோடு பாடுங்கள். விடுதலையோடு பாடுங்கள்.

**மற்றொரு பக்தன் பாடுகிறார் . .**

பயப்படமாட்டேன், நான் பயப்படவே மாட்டேன்,
இயேசு என்னோடு இருப்பதாலே,

ஆம், சகோதரியே இயேசு உன்னோடு இருக்கிறார்.

**அவர் போகும்போதும் காக்கின்றார், உறங்கும்போதும் காக்கின்றார், இப்போதும் எப்போதும் எந்நாளும் காக்கின்றார்.**

அடிக்கடி உன் நாவு இந்தப் பாடலை முணுமுணுக்கிறதல்லவா? உனக்காகவே இந்த செய்தி கடந்து வருகிறது.

**மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்கிறார்.**

சகோதரனே, சகோதரியே உன்னைப் பார்த்து, உன் நிலையைப் பார்த்து கர்த்தர் மனதுருகுகிறார்.

நீ நினைக்கிறாய், என்னை யாரும் கவனிக்கவில்லை; நான் தள்ளப்பட்டவள்; ஒதுக்கப்பட்டவள்; – என்பதாக.

**ஆனால் ஏசாயா 54 : 6 உன்னைப் பார்த்து சொல்கிறது,**

"கைவிடப்பட்டு, மனம் நொந்தவளான ஸ்திரியைப் போலவும், இளம் பிராயத்தில் விவாகம் செய்து, தள்ளப்பட்ட மனைவியைப் போலவும் இருக்கிற உன்னை, கர்த்தர் அழைத்தார்"

"**வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்திற்கு வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்**" – என்றவர் தான் "**உங்களை அழைத்தார்**"

அழைத்தவர் உன்னை, அருமையாய் நடத்தி அனுதின ஊழியம் அளித்திடுவார்.

**யாருக்குத் தெரியும், உந்தனின் அழைப்பு?**

கர்த்தர் நம்மை அழைத்தாரா அல்லது அழைக்கவில்லையா என சந்தேகிக்கும் என் நண்பனே!

**"பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை"**

நீ கர்த்தருக்குத்தானே ஒப்புக் கொடுத்தாய், பரிசுத்த ஜீவியம் செய்யதானே வேண்டிக் கொண்டாய், தியாகியாக மாறத்தானே ஆசைப்பட்டாய், உனக்கு உண்டான எல்லாவற்றையும் விட்டுவிடவும், விற்றுவிடவும் தானே முன் வந்தாய்.

**"பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை"** ஆமென்.